


**04.01.2021**

## 1. ‘கர்த்தரை தேடுவதே’ நம் பாக்கியம்!

**தே**வனைத் தேடுகிறவன் ஒருவனாகிலும் இல்லை! எனக்கூறும் உலக மாந்தர்கள் மத்தியில், நாமோ கர்த்தர் ஒருவரே நம் கதி எனத் தேட வேண்டும்! இந்த கடைசி நாட்களில் நம்மைச் சூழ, எத்தனை துன்பங்கள், விரோதங்கள்! நாமோ, கர்த்தரைத் தேடுகிறபடியால், அவர் நமக்குச் செய்திடும் முதல் பங்கு “நம் எல்லா பயத்திலிருந்தும் நீங்கலாக்குகிறார்!” என்பதுதான்! (சங்.34:4).

நாம் தொடர்ந்து “இந்த ஏழை கூப்பிட்டான்!” என அவரைத் தொடரும்போது, “அவர் என்னை எல்லா இடுக்கண்களுக்கும் நீங்கலாக்கி இரட்சித்தார்!” என்ற ஆச்சரியம் நம் வாழ்வில் அனுபவமாய் மாறிவிடும்! (சங்.34:6). இதுவே, ஆண்டு முழுவதும் நமக்கு நிகழ வேண்டிய பாக்கியம்!

**– ரத்னம்**